# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2339/02 - 2023 ජූලි මස 03 වැනි සඳුදා - 2023.07.03

*2339/02 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 420)**

*அரசியலமைப்பின் 44ஆவது உறுப்புரையின் 2 ம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) 34ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 55 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதியும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய
கொள்கைகள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரும்.

கொழும்பு,
*2023, யூலை 03.*

பொதுப் படுகடன் நிலைபேறான தன்மையினை உறுதி செய்வதற்கும் அத்துடன், அதனூடாக பொருளாதார மீட்சிக்கான விரைவான நிலைமாற்றலையும், அதனைத் தொடர்ந்து இலங்கை மக்களுக்கும் எதிர்கால தலைமுறையினருக்கும் நன்மையபக்கும் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியினைப் பெற்றுக்கொள்வதற்கும் குடியரசின் உள்நாட்டுப் பொதுப்படுகடன் மேம்படுத்தப்பட வேண்டுமென்ற *2023,* யூன் 28 ஆந் திகதியைக் கொண்ட அமைச்சரவையின் தீர்மானத்தினை அனுசரித்து, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (குடியரசு) பாராளுமன்றம் தீர்மானித்துள்ளதுடன், உள்நாட்டுப் பொதுப்படுகடன் மேம்படுத்துதலை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டப்பட்ட அனைத்து அனுமதிகளும் வழங்கப்பட்டுள்ளன.


1A - G 39807 — 356 (2023/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 55 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் இத்தால் பின்வருமாறு ஒழுங்குவிதிகளை ஆக்குகின்றேன்.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் "2023ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கப் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் (பிணையங்களை மாற்றுதல்) ஒழுங்குவிதிகள்" என எடுத்துக்காட்டப்படலாம்.

2. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் படுகடன் பதிவாளருக்கு:-

   2.1 கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் வெளியிடப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதி அல்லது பிணையங்களின் எவரேனும் உடமையாளரிற்கு விடயத்திற்கு ஏற்ப 2023, யூன் 28 ஆந் திகதி அன்று இருப்பிலுள்ள அல்லது அதன் பகுதியினை மாற்றுகின்ற அல்லது பரிவர்த்தனையில் ஈடுபடுகின்ற தெரிவினை வழங்குவதற்கு,

   2.2 கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் வெளியிடப்பட்டு உடமையாளர்களினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதி அல்லது பிணையங்களை விடயத்திற்கு ஏற்ப இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட வேண்டிய திறைசேரி முறிகளிற்கு மாற்றுவதற்கு அல்லது பரிவர்த்தனை செய்வதற்கு,

   2.3 கட்டளைச் சட்டத்தின் கீழ் விடயத்திற்கு ஏற்ப வட்டிக் கொடுப்பனவுகள் எம்முறையில் செலுத்தப்பட வேண்டு மென்பதனையும் எத்தகைய திறைசேரி முறிகள் மாற்றப்படலாம் அல்லது பரிவர்த்தனையில் ஈடுபடுத்தப்படலாம் என்பவற்றிற்குட்பட்ட நிபந்தனைகளையும் குறித்துரைப்பதற்கு,

   நான் இத்தால் பிரகடனப்படுத்தி அதிகாரமளிக்கின்றேன்.

3. மேலே ஒழுங்குவிதி 2 இன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டவாறு பிணையங்களின் மாற்றலிற்கு அல்லது பரிவர்த்தனைக்கு அவசியமாயமைகின்றவாறான திறைசேரி முறிகளின் அத்தகையதொரு தொகையினைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்குவதற்கும் வெளியிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் படுகடன் பதிவாளருக்கு நான் இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

4. ஏதேனும் பங்கு அல்லது பிணையங்கள் தொடர்பில் இலங்கையில் நடைமுறையிலுள்ள எழுதப்பட்ட ஏதேனும் சட்டத்தின் தத்துவங்களின் பண்பினால் சகல சிறப்புரிமைகள், விலக்களிப்புக்கள் மற்றும் விடுபாட்டுரிமைகள் விடயத்திற்கு ஏற்ப மாற்றலில் அல்லது பரிவர்த்தனையில் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படுகின்ற ஏதேனும் புதிய பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி அல்லது பிணையங்களுடன் இணைவதாக கருத்திற்கொள்ளப்பட வேண்டுமென நான் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

5. இவ்வொழுங்குவிதிகளினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு திறைசேரி முறிகளின் உருவாக்கத்தில் மற்றும் வெளியீட்டில் உறப்பட்ட ஏதேனும் செலவுகளைச் செலுத்துகின்ற நோக்கித்திற்கு அவசியமாயமைகின்றவாறான அத்தகைய திறைசேரி முறிகளைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்குவதற்கும் வெளியிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் படுகடன் பதிவாளருக்கு நான் இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

EOG 07 - 0001

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.